வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை




Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05   10.05.2024 வெள்ளிக்கிழமை   இதழ் : 131   பக்கங்கள் : 12

# ஒக். 16இற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல்!

## தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வ அறிவிப்பு



கொழும்பு, மே 10

**ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டு, எதிர்வரும் செப்ரெம்பர் 17 - ஒக்ரோபர் 16ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**


நேற்று வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை வர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில்,

"இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு அரசமைப்பிலும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திலும் காட்டப்பட் டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு உரியகாலப் பகுதியினுள் பெயர் குறித்த நியமனம் கோரப்படும் என்பதும் தேர்தலை நடத்துவதற்கான திகதியை குறிப்பதற்கு தேர்தல் ஆணைக் குழுவுக்கு உரித் தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு அமைய 2024 செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கும் இடைப் பட்ட காலத்தினுள் தேர்தல் நடத்தப்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்பட் டுள்ளது" -

11

### இராஜாங்க அமைச்சரின் ஆசியுடன் வவுனியாவில்

# தமிழர் காணியை அபகரித்து பள்ளிவாசல் அமைக்க முயற்சி!




வவுனியா, மே 10

வவுனியாவிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து இராஜாங்க அமைச்சரின் துணையுடன் பள்ளிவாசல் அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வவுனியா - செட்டிக்குளம் - புதுக்குளம் - கூழாங்குளம் பகுதியிலேயே இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கூழாங்குளம் கிராமத் தில் 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் 200இற்கும் மேற் பட்ட தமிழ் குடும்பங்கள் வசித்தன. இடப்பெயர்வின் பின்னர் தற்போது 30 குடும்பங்களே வசிக்கின்றன.

இந்தக் கிராமத்தை சேர்ந்த 300இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது இந்தியாவில்

11

# அதிக வெப்பத்தால் ஒருவர் உயிரிழப்பு!

### புன்னாலைக்கட்டுவனில் பரிதாபம்

யாழ்ப்பாணம், மே 10

நிலவும் அதிக வெப்பத்தால் புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

சிவஞானம் ஜெயக்குமார் (வயது 45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மதியம் 1.45 மணியளவில் உயிரிழந்தவர் மதுபோதையில் இருந்துள்ளார். இதனை அவரின் மகள் அவதானித்துள்ளார். பிற்பகல் 3.30 மணியளவில் அவர் வெயிலில் விழுந்து கிடந்தார். குடும்பத் தார் அவரை தூக்கியபோது

11

# டயானா கமகேயின் உறுப்புரிமை இரத்து!

கொழும்பு, மே. 10

இலங்கை அரசியலமைப்பினை மீறி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்திருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் பதவி இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக பாராளுமன்றத்தில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதாக சபாநாயகர் சபையில் குறிப்பிட்டார். (அ)

# உயர்நீதிமன்றம் சரியான தீர்ப்பு!

கொழும்பு, மே. 10

டயானா கமகே விவகாரத்தில் உயர்நீதிமன்றம் சரியான தீர்ப்பினையே வழங்கியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னதாக கீதா குமாரசிங்கவின் விவகாரத்திலும் இவ்வாறான நிலையே ஏற்பட்டது. கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமை பெற்றிருந்த

11

# வருமானம் அதிகரிக்கவில்லை; அதனால் சம்பள உயர்வில்லை

## கைவிரித்தார் ஜனாதிபதி ரணில் ஏற்கனவே 10 ஆயிரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாம்!

கொழும்பு, மெ. 10

சம்பள அதிகரிப்பு தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், 2024ஆம் ஆண்டு அதனை எதிர்கொள்ளும் அளவிற்கு அரச வருமானம் வளர்ச்சியடையவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா வாழ்வாதார கொடுப்பனவாக வழங்கப்பட்டது. தற்போது 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு 2,500 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் போது இது போதுமானதாக இல்லை. இருப்பினும் அரசாங்கத்தினால் இயன்ற அளவில் இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூபாயின் பெறுமதி அதிகரித்திருப்பதால், கடந்த சில மாதங்களில் இறக்குமதி பொருட்களின் விலையும் கணிசமாக குறைந்துள்ளது. அதனால் எரிவாயு, கனிய எண்ணெய் , பால்மா போன்றவற்றின் விலைகளும் குறைந்தன. மேலும், வட்டி வீதம் குறைவதால் தொழில் துறையினருக்கும் நிவாரணம் கிடைக்கும்.

2024 ஆம் ஆண்டிலும் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான கோரிக்கைகள் வந்தாலும் அரசாங்கத்தின் வருமானம் அதற்குத் தகுந்த வகையில் அதிகரிப்பை காட்டவில்லை. கடந்த காலங்களில் பொறுப்பற்ற முறையில் வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகள் எமது பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கையையும் அழித்தது. அனைத்துப் பிரிவு மக்களும் கடந்த இரண்டு வருடங்களாக மிகவும் கடினமான பாதையில் பயணிக்கின்றனர்.

2024 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சியை கவனத்தில் கொண்டு சம்பளத் திருத்தம் குறித்து தீர்மானிக்க முடியும்.

இப்போது செயற்படுத்தப்படும் பொருளாதாரத் திட்டங்களை கைவிட்டால் மீண்டும் பெரும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். 2022 செப்ரெம்பர் முதல் நாணய நிதிய வேலைத் திட்டத்தின் மூலம் பல சாதகமான பலன்களை அடைந்துள்ளோம்.

பெரும்பாலும் வெளிநாட்டு பரிவர்த்தனைகளைச் சார்ந்து இருக்கும் சிறிய பொருளாதாரம் என்பதால், நாம் ஏற்றுமதியில் அதிக கவனம்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அந்தக் காலத்தில் நல்லெண்ணெய் தயாரிப்பதற்காக செக்குகளை பயன்படுத்துவார்கள். இப்போதும் சுத்தமான நல்லெண்ணெய் என்றால் செக்குகளில் வடிக்கப்பட்ட எண்ணெயைத்தான் பலரும் தேடி வாங்கிப் பாவிப்பார்கள்.

செக்குகளில் எள்ளைப் போட்டு அதனை அரைப்பதற்காக இரண்டு மாடுகளை வண்டிலில் பூட்டுவது போல பூட்டிவிடுவார்கள். அவை அப்படியே செக்கை சுற்றி நடந்து கொண்டிருக்கும். அவை அப்படி வட்டவடிவில் தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருக்கும். அந்த செக்கு உரிமையாளர் மாடுகளின் கழுத்தில் மணிகளை கட்டிவிடுவார். அவை செக்கைச் சுற்றி நடந்துகொண்டிருக்கும்போது மணிகள் ஆடி ஆடி ஒலி எழுப்பிக்கொண்டே இருக்கும். அந்த மணி ஓசை அவை செக்கை சுற்றி நடந்துகொண்டிருக்கின்றன என்பதை வீட்டுக்குள் இருக்கும் உரிமையாளருக்கும் உணர்த்திக் கொண்டிருக்கும்.

ஒருநாள் அவரின் வீட்டுக்கு வந்த இவரின் நண்பர் ஒருவர், விசயம் தெரியாதவர் போல மாட்டின் கழுத்தில் எதற்காக மணிகளை கட்டியிருக்கிறீர்கள் என்று கேட்டார். இவர் ஏதோ குதர்க்கமாக பேசுவதற்காகத்தான் அப்படிக் கேட்கிறார் என்று தெரிந்திருந்தாலும், அவர் சொன்னார்: "மணி கட்டியிருப்பதால், அது எழுப்பும் மணி ஓசை அவை தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கின்றன என்பதை எனக்கு உணர்த்து மல்லவா? நான் வீட்டுக்குள் இருந்தாலும், மாடுகள் வேலை செய்துகொண்டிருக்கின்றன என்பதை நான் புரிந்துகொள்ளலாம் என்பதற்கவே மணி." என்றார்.

உடனே வந்த நண்பர் குதர்க்கமாக கேட்டார்: "அப்ப மாடுகள் ஒரு இடத்திலேயே நிண்டு தலையை ஆட்டிக் கொண்டிருந்தாலும் மணிச்சத்தம் கேட்கும்தானே?".

அதற்கு இவர் சொன்னார்: "என்ர மாடுகள் உங்களைப்போல தர்க்கம் படிச்ச மாடுகள் இல்லையே." என்று.

இன்று அதிகாலை கனடாவிலிருந்து ஒரு நண்பர் தொலைபேசியில் அழைத்தார். இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஊடகவியலாளர்களில் மிக மூத்தவர் அவர். அவர் அழைப்பு எடுக்கிறார் என்றாலே ஏதாவது மிக முக்கியமான விடயங்களுக்காகத்தான் எடுக்கிறார் என்பது தெரிந்திருந்ததால், அந்த அகால வேளையிலும் அவரது அழைப்பை எடுத்தேன். எடுத்த எடுப்பில் சொன்னார்:

"ஊர்க்குருவி தொடக்கிவைத்த அந்த தமிழ் பொதுவேட்பாளர் பிரசாரத்தை தொடக்கிவிட்டாரே" என்று, அவர் எதனைச் சொல்கிறார் என்பது தெரியவில்லை. இந்தப் பத்தியில் அவ்வப்போது தமிழ் பொதுவேட்பாளர் விடயத்துக்கு ஆதரவாக எழுதியிருந்தாலும் அப்படி யாரும் வேட்பாளரை நியமித்ததாகவோ அல்லது பிரசாரத்தை தொடக்கியதாகவோ அறிந்திருக்கவில்லை.

"இன்னும் யாரும் வேட்பாளரை நியமிக்கவே இல்லையே? எப்படி பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டார்" என்கிறீர்கள் என்று கேட்டேன்.

அவர் சொன்னார், "பொது வேட்பாளருக்கு எதிராக பலமான ஒரு பிரசாரத்தை தொடக்கிவிட்டார்களே. அதுவே வேட்பாளருக்கு நல்ல பிரசாரம்தானே?" என்றவர், "உங்களுக்கு தெரியுமா? எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது, தினசரி எழுந்ததும், தனது உதவியாளரிடம் இன்று எந்தப் பத்திரிகை நம்மைப்பற்றி விமர்சித்திருக்கின்றது?" என்று கேட்பாராம். அதற்கு அவரின் உதவியாளர், "இன்று யாரும் உங்களை விமர்சிக்கவில்லை" என்றால், அப்படியெனில் நேற்றைய தனது நடவடிக்கைகளில் ஏதோ தவறு இருக்கின்றது" என்பாராம். அதாவது தன்னைப் பற்றி தவறான பிரசாரங்கள் - விமர்சனங்கள் வருவதையே அவர் விரும்பினாராம். இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்த நண்பர் கேட்டார், "இந்தப் பொது வேட்பாளர் விடயத்தை எதிர்ப்பவர்கள் என்ன சொல்கிறார்கள், மூன்று சிங்கள வேட்பாளர்களில் ஒருவருக்கு வாக்களிக்குமாறுதானே? முன்னணியினர் தமது முடிவில் திடமாக இருக்கிறார்கள். ஆனால், மற்றவர்கள் சொல்வது மூவரில் ஒருவரை ஆதரிக்கச் சொல்லித் தானே?" என்றார்.

"அதுவல்ல அவர்களின் முக்கியமான பிரச்னை, இந்த முடிவை எடுப்பதற்கு முதல், இதற்கு ஆதரவாக கருத்துச் சொல்பவர்களோ அல்லது அதனை முன்னெடுக்கும் சிவில் சமூக பிரதிநிதிகளோ, தமிழ் மக்களின் விருப்பத்தை அறிந்தார்களா?" என்பதல்லவா? என்றேன்.

"அப்படியெனில் இதற்கு முதல் சரத் பொன்சேகாவை ஆதரித்த போதோ அல்லது கடைசியாக சஜித்தை ஆதரித்தபோதோ தமிழ் மக்களின் கருத்தைக் கேட்டு அறிந்துதான் சம்பந்தன் முடிவெடுத்தாரா? என்று கேட்டார் நண்பர், அல்லது பன்னிரண்டு இலட்சம் தமிழ் மக்களையும் தனித்தனியாக சந்தித்துக் கேட்டு முடிவெடுக்கச் சொல்கிறார்களோ?" என்றார்.

"மக்கள் வாக்களிக்காமல் விட்டுவிட்டால், தமிழ் மக்களின் அரசியல் வாழ்க்கையே அதலபாதாளத்துக்கு சென்றுவிடுமே என்ற அவர்களின் வாதமும் சரியானது தானே" என்றேன். அதற்கு அவர் கேட்டார், "இப்போது மட்டும் தமிழர்களின் அரசியல் உச்சத்தில் இருக்கிறதா? இதைவிட பள்ளத்துக்கு போவதற்குக்கூட இனி இடமில்லையே?" என்று. அவரோடு வாதம் புரிய முடியவில்லை. ஒருவாறு தொடர்பை துண்டித்தேன்.

அவர் சொன்ன விடயங்களை இரைமீட்டபோதுதான், பொது வேட்பாளர் விடயத்தை எதிர்ப்பவர்கள் அந்த செக்கு மாடுகள் பற்றி கேள்வி கேட்டவரின் மனநிலையில் இருந்துதான் கேட்கிறார்களோ என்றே எண்ணத் தோன்றியது.!

- ஊர்க்குருவி.

## தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் திருத்த சட்டமூலம் இன்று சமர்ப்பிப்பு

### இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தகவல்

கொழும்பு, மே 10



28 வருடங்களின் பின்னர் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான திருத்தப்பட்ட சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

மேலும், தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை இம்மாதம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

டிஜிற்றல் வியூகத் திட்டம் - 2030 க்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. அதில் 6 முக்கிய விடயங்களை முன்வைத்துள்ளோம். அதில் முதலாவது உட்கட்டமைப்பு வசதிகள், இணைப்பு மற்றும் அணுகல், திறன்கள், கல்வியறிவு, கைத்தொழில்கள் மற்றும் தொழிற்துறை, இணைக்கப்பட்ட டிஜிற்றல் அரசாங்கம். மேலும், சைபர் பாதுகாப்பு, தரவுப் பாதுகாப்பு, தனித்தன்மை, டிஜிற்றல் நிதிச் சேவைகள், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைகளின் டிஜிற்றல் மயமாக்கல் ஆகியவற்றை சுட்டிக்காட்டலாம். வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுடன் இணைந்து ஜூன் 25 ஆம் திகதி உலகளாவிய முதலீட்டு ஊக்குவிப்பு மாநாடு நடத்தப்படவுள்ளது.

மேலும், பாடசாலைகளுக்கு 1000 ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், தகவல் தொழில்நுட்பம் அல்லாத பட்டதாரிகள் மற்றும் ரேஏஜ 4 தகுதி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், 28 வருடங்களுக்குப் பின்னர், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான திருத்தச் சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கு முன்னர் கடலுக்கு கீழ் பயன்படுத்தப்படும் கேபிள் இணைப்புக்களுக்கு சட்டவிதிகள் இருக்கவில்லை. அதற்கான சட்டவிதிகளை இந்த சட்டமூலத்தின் மூலம் சமர்ப்பிக்க முடிந்துள்ளது.

அனைத்து விதமான சமூக வலைத்தள பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 60 மில்லியனிலிருந்து 74 மில்லியனாக அதிகரித்துள்ளது. எனவே தேசிய சைபர் பாதுகாப்பு சட்டம் அவசியப்படுகின்றது. இதன்படி, குறித்த சட்டத்தை இம்மாதம் வரையத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊடு ஊநுசுவு நிறுவனத்துடன் இணைந்து 29 அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் சைபர் பாதுகாப்பை அதிகரிக்கத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக 05 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன- என்றார். (எ)

## டயானாவுக்கு பயணத் தடை கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மே 10

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்தது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை டயானா கமகேவுக்கான இந்த வெளிநாட்டுப் பயணத் தடையை விதித்தது.

இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான வழக்கில் மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு நீதிவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த உத்தரவின் பிரதிகள் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் அலுவலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## "பாராளுமன்றத்துக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்தது நீதிமன்றம்"

கொழும்பு, மே 10

டயானா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போனமை பாராளுமன்றத்துக்கும் சபாநாயகருக்கும் பெரும் சுதந்திரம் கிடைத்ததை போன்றது என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த டயானா கமகேவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றத்தால் முக்கிய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அவர் இனி பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. இதன்மூலம் இந்த பாராளுமன்றத்துக்கு பெரும் சுதந்திரம் கிடைத்துள்ளது என்பதுடன், சபாநாயகருக்கும் பெரும் சுதந்திரம் கிடைத்துள்ளது என்பதனை கூறுகின்றோம் - என்றார். (எ)

## உக்ரைன் - ரஷ்யா போரில் 6 இலங்கையர்கள் மரணம்

கொழும்பு, மே 10

மனிதக் கடத்தல்காரர்களால் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட இலங்கையர்கள் 6 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இது உறுதிப்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலும் இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை கண்டறிய மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.05.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்கள் யாரை விரும்புகின்றனர்?

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை தேர்தல் திணைக்களம் அறிவித்திருக்கின்றது. தேர்தல் அரசியல் இனி கொதிநிலை அடையும் - அரசியல் கூட்டுகள் தொடர்பான பேச்சுகள் தீவிரமடையும். இவ்வாறானதொரு சூழலில் தமிழர் தரப்புகளும் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு இறுதி முடிவை நோக்கி விரைவாக நகர வேண்டும். இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வஜிர அபேவர்த்தன - தமிழ் மக்கள் ரணிலை விரும்புகிறார்கள். எனவே, ரணில் இருக்கும்போது எதற்காக இன்னொரு பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் கட்சிகள் அக்கறைப்படுகின்றன என்றவாறு கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்கள் ரணிலை விரும்புகின்றனர் என்பதற்கு என்ன ஆதாரம் உண்டு? சஜித் பிரேமதாஸவும் அவருக்கு ஆதரவானவர்களும் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவையே விரும்புகின்றனர் எனக் கூறுகின்றனர். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் உண்மையில் யாரை விரும்புகின்றனர் - அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் உண்மையிலேயே அக்கறைப்படுகின்றனரா அல்லது ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படும்போது எழுச்சியுற்று தங்களின் வேட்பாளருக்கே வாக்களிப்பார்களா? என்ற கேள்விகளுக்கு எவரிடமும் பதிலில்லை. இது தொடர்பில் வடக்கு - கிழக்கில் கருத்துக்கணிப்புகளும் நடைபெறவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் மக்கள் ரணிலை விரும்புகிறார்கள் என்னும் முடிவுக்கு வரமுடியாது.

கடந்த காலங்களில் ஜனாதிபதி தேர்தல்களின்போது தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களித்திருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் மக்கள் விரும்பக் கூடுமென்று ரணிலின் ஆதரவாளர்கள் எண்ணக்கூடும். இதே போன்று, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களித்திருந்தனர். அதனடிப்படையில், தமிழ் மக்கள் இம்முறையும் சஜித் பிரேமதாஸவையே ஆதரிப்பார்கள் என்னும் முடிவுக்கும் அவர்கள் வரக்கூடும்.

தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிற்கும்போது - அதனை பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஆதரிக்கும்போது தமிழ் மக்கள் யாரை விரும்புவார்கள்? இந்தக் கேள்விக்கான பதிலில்தான் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. ஒருவேளை தமிழ் மக்கள் அவரை பெரும்பான்மையாக நிராகரித்தால் அதுவும் ஓர் அரசியல் செய்திதான். ஆனால், அதற்கான வாய்ப்பில்லை.

2010, 2015, 2019, ஜனாதிபதி தேர்தல்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவுரைக்கு அமைவாகவே மக்கள் வாக்களித்திருந்தனர். இல்லை - நாங்கள் மக்கள் சிந்தித்த பக்கமாக நின்றோம் என்று எவரேனும் கூறினால் அது அவர்களின் அரசியல் இயலாமையை அவர்களே ஒப்புக் கொள்வதாகும். அதுதான் இப்போதும் நிலைமை என்றால் தமிழ்த் தேசிய அடிப்படையில் செயல்படுவதாகக் கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகள் தங்களின் கடைகளை மூடிவிடுவதே சரியானது.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் எதிர்கொண்ட தேர்தல்கள் போன்ற ஒன்றல்ல. மாறாக, இது முற்றிலும் மாறுபட்ட ஒரு தேர்தல். இந்தத் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி தோல்வியுற்றால் தமிழ் மக்கள் மத்தியில் இனி எவருமே ஒற்றுமை பற்றி பேசும் தகுதியுடைவராக இருக்கப் போவதில்லை. இதேபோன்று, சிவில் சமூக அமைப்புகளும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் பேசும் தகுதியை முற்றிலுமாக இழக்கும்.

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு; முதலாளிமார் சம்மேளனம் சாதக பேச்சு!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, மே 10

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பின்னர் முதலாளிமார் சம்மேளனம் எம்முடன் சாதகமான பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுகள் நடத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி வெளிப்படுத்தியிருந்தார்.

என்றாலும், முதலாளிமார் சம்மேளனம் 1,200 ரூபாய் வரையே சம்பள அதிகரிப்பை வழங்க முடியும் என சுட்டிக்காட்டியது. அத்துடன், அதனை அடிப்படை சம்பளமாக வழங்க முடியாது, செயல்திறன் அடிப்படையிலேயே வழங்க முடியும் என்று கூறியது.

இந்த தொழில்துறை வீழ்ச்சியடையாது எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்லப்பட வேண்டுமென கம்பனிகளின் கோரிக்கைகளையும் உள்வாங்கி ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்கள் நடத்தினோம்.

கூட்டு உடன்படிக்கையின் ஊடாகவே சம்பள அதிகரிப்பு கடந்த காலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 2020ஆம் ஆண்டு கம்பனிகளும் தொழிற்சங்கங்களும் கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியதால் தொழில் அமைச்சின் தலையீடுகளின் ஊடாக சம்பள பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டது.

கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பிரச்னைக்கு தீர்வுகாண முற்பட்டோம். ஆனால், இணக்கப்பாடுகள் எட்டப்படாமையால் மீண்டும் சம்பள நிர்ணய சபையின் ஊடாக இந்த விவகாரத்தை தீர்க்க கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

சம்பள நிர்ணய சபையின் கலந்துரையாடல்களில் முதலாளிமார் சம்மேளனம் கலந்துகொள்ளாமையால் தொழில் அமைச்சுக்கு உள்ள அதிகாரத்தின் ஊடாக 1350 ரூபாய் அடிப்படை சம்பளமும் 350 ரூபாய் கொடுப்பனவு அடிப்படையிலுமாக 1700 ரூபாய் சம்பள அதிகரிப்பை மேற்கொண்டோம்.

மே 15ஆம் திகதி வரை கம்பனிகளுக்கு எதிர்ப்பை வெளியிட சந்தர்ப்பம் உள்ளது. இந்த காலப்பகுதிகுள் உடன்பாடுகளை அவர்கள் எட்ட வேண்டும். கம்பனிகளின் தரப்பு தற்போது எம்முடன் பேச்சுகளை முன்னெடுத்து வருகிறது. எவ்வாறாயினும், 15ஆம் திகதிக்குள் இணக்கப்பாடுகள் எட்டப்படாவிடின் மீண்டும் இதனை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்." - என்றார். (ஐ)

# போதைப்பொருளுடன் 733 பேர் கைதாகினர்!

கொழும்பு, மே 10

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் 6 பெண்கள் உட்பட 733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 33 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 17 பேரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 85 கிராம் ஹெரோயின்,128 கிராம் ஐஸ், 2.4 கிலோ கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பாதாள குழுவை சேர்ந்த மூன்று பேர் கைதாகினர்!

கொழும்பு, மே 10

பாதாள உலக செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களை சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பாதாள உலக குழுக்களுடன் தொடர்புகளை பேணினர் என்று கூறப்படும் மேலும் 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ரிகில்லகஸ்கட பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு 12 மற்றும் கொழும்பு 15 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 29 மற்றும் 43 வயதுடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 927 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



வைகாசி - 10 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 26
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.30
திதி : திரிதியை




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மன நிம்மதி ஏற்படும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளையும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**மிதுனம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக் கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கடகம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**சிம்மம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் திருப்தி உண்டாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறு சிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். குடும்பத்தில் பல விஷயங்களை நீங்களே பார்க்க வேண்டி இருக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.


**தனுசு**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும்.

**மகரம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர் கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்து நிறைவேறும் நாள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

# சென்னை வீதிகளில் பசுமை பந்தல் அமைப்பு



சென்னை, மே 10


வாகனச் சாரதிகளுக்கு நிழல் தரும் வகையில் சென்னை மாநகர வீதிகளிலுள்ள 8 சமிக்ஞை பகுதிகளில் பசுமை பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கோடை வெயிலின் தாக்கம் கடந்த மார்ச் மாதத்திலிருந்து வாட்டி வதைத்து வருகிறது. கத்திரி வெயில் காலம் கடந்த 4 ஆம் திகதி தொடங்கிய பிறகு மேலும் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது.

கோடை வெயில் சுட்டெரித்து வரும் நிலையில் வாகனச் சாரதிகளுக்கு நிழல் தரும் வகையில் சென்னை மாநகர வீதிகளிலுள்ள 8 சமிக்ஞை பகுதிகளில் பசுமை பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

கடும் வெயிலில் சமிக்ஞை பகுதிகளில் வாகனச் சாதிகள் நிற்கும்போது ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

# சவுக்கு சங்கர்மீது சிறையில் தாக்குதல் மருத்துவமனையில் சேர்க்க உத்தரவு



கோவை, மே 10

பிரபல யூ - ரியூபர் சவுக்கு சங்கர் அண்மையில் ஒரு யூ-ரியூப் சனலுக்கு வழங்கிய நேர்காணலில் பெண் பொலிஸார் குறித்தும், பொலிஸ் அதிகாரிகள் பற்றியும் பாலியல் தொடர்பான அவதூறு கருத்துகளைத் தெரிவித்ததாக பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

இந்நிலையில் தேனியிலுள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்த சவுக்கு சங்கரை கடந்த 4 ஆம் திகதி அதிகாலை கைது செய்து கோவை சிறையில் அடைத்தனர்.

சவுக்கு சங்கர் கோவை சிறையில் இருந்ததால், அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்த அனுமதி பெறப்பட்டது. இதையடுத்து மதுரையிலுள்ள போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றில் சவுக்கு சங்கரை பொலிஸார் முன்னிலைப் படுத்தினர்.

அப்போது நீதிபதி "உங்கள் மீதான வழக்கு குறித்து ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" எனக் கேட்டார். அதற்கு சவுக்கு சங்கர் ஹஹஇது பொய் வழக்கு. கோவை சிறையில் பொலிஸார் என்னைக் கடுமையாக தாக்கினர். இதனால் எனக்கு கை மற்றும் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதற்கு உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கோவை சிறையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. இதனால் என்னை மதுரை சிறைக்கு மாற்ற வேண்டும்"- என்றார்.

அதற்கு நீதிபதி தங்களது கோரிக்கை தொடர்பில் மனு வழங்கும் பட்சத்தில் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்- என்றார். இதையடுத்து சவுக்கு சங்கரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து பொலிஸார் அவரை மீண்டும் கோவை சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் சிறையில் சவுக்கு சங்கர் தாக்கப்பட்டதாகவும், கைகளில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தார். அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவின்பேரில் சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டத்தரணிகள் மற்றும் அரசு மருத்துவக் குழுவினர் சிறைக்குச் சென்று விசாரணை நடத்தினர். அந்த அறிக்கை நீதிமன்றத்தில் தனித்தனியாக சமர்பிக்கப்பட்டது.

அறிக்கையின் அடிப்படையில் சவுக்கு சங்கருக்கு சிகிச்சை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சவுக்கு சங்கர் சேர்ப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

# தண்டனையை இரத்து செய்க நிர்மலா தேவி மேன்முறையீடு

## சி. பி. சி. ஐ. டி. பதிலளிக்க உத்தரவு



மதுரை, மே 10

கல்லூரி மாணவிகளைத் தவறான வழிக்கு அழைத்துச் சென்ற வழக்கில் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை இரத்துச் செய்யக்கோரி பேராசிரியை நிர்மலா தேவி தாக்கல் செய்த மேன்முறையீடு மனு தொடர்பில் சி. பி. சி. ஐ. டி. பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விருதுநகர் மாவட்டம் அருப்புக் கோட்டையிலுள்ள கல்லூரியில் உதவி பேராசிரியையாகப் பணி யாற்றியவர் நிர்மலா தேவி. இவர் மாணவிகளைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும் வகையில் நடந்து கொண்டார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த சிறீ வில்லிபுத்தூர் மாவட்ட மகளிர் நீதிமன்றம், நிர்மலா தேவிக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்நிலையில் தண்டனையை இரத்துச் செய்யக் கோரியும், பிணை கோரியும் நிர்மலா தேவி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி, இது தொடர்பில் சி. பி. சி. ஐ. டி. பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஜூன் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறிய மீன்பிடிக்காக 178 இந்திய மீனவர் கைது!

கொழும்பு, மே 10

**இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்கா இந்த ஆண்டில் 178 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

அத்துடன், மீனவர்களின் 23 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 264 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்களின் 35 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)


# ரூ. 2 இலட்சம் லஞ்சம் வாங்கிய பொலிஸார் இருவர் கைதாகினர்

கொழும்பு, மே 10

2 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் உட்பட மூவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - பன்னிப்பிட்டி - கொட்டாவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)



## நாவற்குழியில் நேற்று யுக்திய சோதனை!

தென்மராட்சி, மே 10

நாவற்குழியில் நேற்று விசேட அதிரடிப் படையினர் யுக்திய சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நேற்று காலை முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து ஏ-9 மற்றும் ஏ-32 வீதிகளூடாக பயணித்த வாகனங்களை சோதனைக்கு உட்படுத்தினர்.

பொலிஸ்மா அதிபர் தேசப்பந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கு அமைவாக முன்னெடுக்கப்படும் யுக்திய நடவடிக்கையின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# முல்லைத்தீவை சிங்கள பூமியாக மாற்றுவதை தடுத்து நிறுத்துக

## முல்லைத்தீவு மாதர் சங்கம்

யாழ்ப்பாணம், மே 10

தமிழ் அரசியல்வாதிகள் இனி யாவது உங்கள் வாய்களைப் பாராளுமன்றத்தில் திறவுங்கள். முல்லைத்தீவு சிங்கள பூமியாக மாற்றுவதை தடுத்து நிறுத்துங்கள் - என்று முல்லைத்தீவு மாதர் சங்க தலைவி சு. கங்கம்மா வேண்டுகோள் விடுத்தார்.

வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக மகாவலி ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்திய போராட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், முல்லைத்தீவில் மகாவலி என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்களவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்படுகிறது.

கொக்குதொடுவாயில் 3 கிராமங்கள் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட நிலையில் குறித்த பிரதேசம் பரந்துபட்ட வயல் காணிகளைக் கொண்ட பிரதேசம் 1984 ஆம் ஆண்டு சிங்கள அரசாங்கம் திட்டம் திட்டமிட்ட முறையில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு மூன்று நாட்களில் உங்களை மீண்டும் குறித்த பகுதியில் அனுமதிக்கிறோம் என்றனர்.

ஆனால், முப்பது வருடங்கள் குறித்த பகுதிக்கு செல்வதற்காக நாம் காத்திருந்த நிலையில் விடுவிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்த நிலையில் எமது காணிகள் எமக்கு ஒப்படைக்கப்படவில்லை.

சிங்கள அரசாங்கம் மனசாட்சி இல்லாத அரசாங்கம். சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களின் காணிகளைப் பிடித்துக் கொடுக்க முடியும் என்றால் ஒரு பகுதியை ஏனும் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற மனோநிலை வரவில்லை. ஆகவே, தமிழ் அரசியல்வாதிகள் இனி யாவது உங்கள் வாய்களைப் பாராளுமன்றத்தில் திறவுங்கள். முல்லைத்தீவு சிங்கள பூமியாக மாற்றுவதை தடுத்து நிறுத்துங்கள் - என்றார்.

# வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி நேற்று யாழ். நகரில்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணத்தில் வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வுக்கான நடைபவனி நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

வேம்படி சந்தியில் ஆரம்பமான இந்த நடைபவனி யாழ். போதனா மருத்துவமனை வீதியூடாக சத்திரச் சந்தி வரை நடைபெற்றது.

இந்த நடைபவனியின்போது, வீதியில் காணப்படும் இடர்பாடுகளுடைய இடங்களை அடையாளம் காணல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன நடைமுறைகளை பின்பற்றல் - பரிசோதனை போன்ற செயல்பாடுகள் நடைபெற்றன. இந்த செயல்பாட்டை வேறு பகுதிகளிலும் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது.



இந்த நடைபவனியில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர், வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், மோட்டார் வாகன பரீட்சகர்கள், அதிகாரிகள், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், போக்குவரத்து பொலிஸார், வைத்தியர்கள், மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# நூற்றுக்கும் மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன!

முல்லைத்தீவு, மே 10

முல்லைத்தீவு - இரணைப்பாலையில் காணி ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட முதிரை மரக் குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையிலேயே இந்த முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் பெறுமதி பல இலட்சம் ரூபாய் என்று கூறப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தல் இடம்பெற்று வருவதாக தொடர்ச்சியாக மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றார்கள். வனவள திணைக்களம், பொலிஸார் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் ஆதரவுடனேயே இவ்வாறான செயல்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில் இரணைப்பாலையில் ஏராளமான முதிரை மரக்குற்றிகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால், பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்காது அலட்சிய போக்குடன் செயல்பட்டதனால் வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் தனபாலவுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் காணி ஒன்றில் நூற்றுக்கும் மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)



# வெளிநாட்டவரின் காணி உறுதியை ஈடுவைத்தவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், மே 10

வெளிநாட்டில் உள்ளவரின் காணியை மோசடியான முறையில் உள்நாட்டில் ஈடு வைத்து பணம் பெற்ற ஒருவர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

புலம்பெயர் நாட்டில் வாழும் நபர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது காணியின் உறுதியை பதிவு ஒன்றுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள தனது உறவினர் ஒருவரிடம் வழங்கியுள்ளார்.

இதையடுத்து அந்த நபர், காணி உறுதிப் பத்திரத்தை உள்ளூரிலுள்ள ஒருவரிடம் 12 இலட்சம் ரூபாய்க்கு ஈடுவைத்து பணம் பெற்றுள்ளார்.

இதனை அறிந்த வெளிநாட்டில் வசிக்கும் காணி உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் முறைப்பாடு செய்ததை அடுத்து மோசடி செய்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளை அடுத்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகுமாறு எனக்கு அழுத்தம் தருகிறார்கள்!

## அமைச்சர் டிரான் அலஸ் சொல்கிறார்

கொழும்பு, மே 10

**அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு சிலர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

போதைப் பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு பேணும் தரப்பினர் இவ்வாறு அழுத்தம் பிரயோகித்து வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதனால் இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. எனினும் எவ்வளவு அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் பாதாள உலகக் குழுக்களிடமிருந்து நாட்டை மீட்டு எடுக்க திட்டமிட்டுள்ளோம். இந்த நடவடிக்கைகளை விரும்பாதவர்கள் சகல வழிகளிலும் தடை ஏற்படுத்தி வருகின்றனர் - என்றார்.

மேலும், தாம் அண்மையில் வெளியிட்ட கருத்து ஒன்றின் அடிப்படையில் பதவி விலகுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறியுள்ளார். (ஐ)

# 103 காட்டு யானைகள் ரயில்கள் மோதி மரணம்!

## பாதுகாக்க விசேட திட்டம் என்கிறார் வனஜீவராசிகள் அமைச்சர் பவித்ரா

கொழும்பு, மே 10

**2015ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 103 காட்டு யானைகள் ரயில்களில் மோதி உயிரிழந்தன.**

காட்டு யானைகளைப் பாதுகாப்பதற்குப் ரயில் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து விசேட செயல்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் என்று வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாரச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு முதல் 2024இன் நிறைவடைந்த நான்கு மாத காலப்பகுதியில் மாத்திரம் 103 காட்டு யானைகள் ரயில்கள் மோதி உயிரிழந்தன.

காட்டு யானைகள் புகையிரதங்களில் மோதுவதைத் தடுப்பதற்கு முறையான பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய புகையிரதத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு ஒன்றிணைந்து புகையிரத பாதைகளில் காட்டு யானைகள் பயணம் செய்யும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பகுதிகளை விசேட பாதுகாப்பு பகுதிகளாகவும் கண்காணிப்பு பகுதிகளுக்காகவும் அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காட்டு யானைகள் கடக்கும் பகுதிகள் குறித்து ரயில் சாரதிகளுக்கு தெளிவுபடுத்தவும் புகையிரத பாதைகளில் வளைவு பகுதிகளைக் காட்டு யானைகள் கடக்கும் போது அவைகளை முன்கூட்டியே அவதானிக்கும் வகையில் விசேட இயந்திரங்கள் பொருத்துவதற்கும் புகையிரத பாதை வளைவுகளைத் தொடர்ந்து பராமரிப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# பிரசார பணிமனையை திறக்கிறது பெரமுன!

கொழும்பு, மே 10

நாட்டில் நடைபெறவுள்ள தேர்தல்களின்போது பிரசார நடவடிக்கைகளை கையாள பொதுஜன பெரமுன பணிமனை ஒன்றை திறந்து வைக்கவுள்ளது.

சிறி லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை பணிமனையிலேயே இந்தப் பிரசார பணிமனை அமையவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்தப் பணிமனையை திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் தேர்தல்களின் போது அனைத்துத் தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கிய தாக வெவ்வேறான பிரசார மற்றும் ஊடக நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணியை இந்தப் பணிமனை கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நெல்லியடியில் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்றவர் கைது

வடமராட்சி, மே 10


நெல்லியடி பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு கஞ்சா கலந்த மாவா விற்பனை செய்தவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

நெல்லியடி முகாம் அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெல்லியடியில் நேற்று முன்தினம் நடத்திய சோதனை நடவடிக்கையிலே - ஈடுபட்டனர்.

இதன்போது, துன்னாலை கிழக்கு, கரவெட்டி பகுதியை சேர்ந்த 32 வயது நபர் கைது செய்யப்பட்டார். அவர், அந்தப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து கஞ்சா கலந்த மாவா விற்பனை செய்து வந்தவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 119 கிராம் 40 மில்லி கிராம் கஞ்சா கலந்த மாவா கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைக்காக அவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் நீண்டகாலமாக பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்குவைத்து இந்த கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)



# பேராசிரியர் வித்தியானந்தனின் உருவப்படம் யாழ். போதனாவில்!

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பிதாமகருமான பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு யாழ். போதனா மருத்துவமனையின் அருங்காட்சியகத்தில் அவரின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இந்த நிகழ்வு நேற்று முனதினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறை தலைவர் வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட பீடாதிபதி இ. சுரேந்திரகுமரன், யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், யாழ் போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# இஞ்சியின் விலை ரூ. 3,000ஆக உயர்வு

கொழும்பு, மே 10

ஒரு கிலோ இஞ்சியின் விலை 3 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று விற்பனையான மரக்கறிகளின் விலை விவரம் வருமாறு,

ஒரு கிலோ கரட் 120 - 150 ரூபாயாகவும் ஒரு கிலோ போஞ்சி 150 - 180 ரூபாவாகவும்,ஒரு கிலோ லீக்ஸ் 150 - 180 ரூபாவாகவும், ஒரு கிலோ தக்காளி 30 - 40 ரூபாயாகவும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 70 - 80 ரூபாயாகவும், ஒரு கிலோ கறிமிளகாய் 150 - 180 ரூபாயாகவும், ஒரு கிலோ வெங்காயத்தாள் 110 ரூபாயாகவும், ஒரு கிலோ முள்ளங்கி 40 - 50 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டன.

இதேவேளை, ஒரு கிலோ வெண்டிக்காய் 90 - 120 ரூபாயாகவும், ஒரு கிலோ பீர்க்கங்காய் 120 - 150 ரூபாயாகவும், ஒரு கிலோ பாகற்காய் 130 - 150 ரூபாயாகவும், ஒரு கிலோ பூசணிக்காய் 25 - 30 ரூபாயாகவும், ஒரு கிலோ கத்தரிக்காய் 90 - 150 ரூபாயாகவும், ஒரு கிலோ கோவா 90 - 110 ரூபாயாகவும், ஒரு கிலோ தேசிக்காய் 600 ரூபாயாகவும், ஒரு கிலோ இஞ்சி 3 ஆயிரம் ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# மதுபானத்தை ஆர்வப்படுத்தும் நடவடிக்கையை அரசு செய்யாது

## ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, மே 10

மதுபானத்தை ஆர்வப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஒருபோதும் மேற்கொள்ளாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரன மதுபான போத்தலுக்காக நாம் இன்று 75 வீதம் வரியை அறவிடுகின்றோம். இதேவேளை தற்போதைய அரசாங்கத்துக்கு மதுபான பயன்பாட்டை அதிகரிப்பதற்கான தேவைப்பாடு கிடையாது.

இருப்பினும், சட்டவிரோத மதுபான பாவனையை குறைப்பதற்கும் அரச வருமானம் இன்மையை குறைப்பதற்கும் சவால் காணப்படுகின்றது. நாங்கள் பொதுவாக மதுபான விற்பனை மூலமாக 75 வீத வரியை அறவிடுகின்றோம்.

கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நாங்கள் 2023 ஆம் ஆண்டு வரியினை 60 வீதத்தால் அதிகரித்திருந்தோம். இதேவேளை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மதுபான போத்தல்களில் ஸ்ரிக்கர்களை ஒட்டி நாங்கள் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம்.

அதேபோன்று சிறப்பு சந்தைகளில் வருடாந்த விற்பனை 75 மில்லியன் என்றால் அவர்களுக்கு மதுபான உரிமைப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு உரிமை இருக்கின்றது. ஆனால், தற்போது அது ஒரு முறைகேடாக மாறியுள்ளது.

இதேவேளை, வருடாந்தம் 75 மில்லியன் என்பதை நாம் 1000 மில்லியனாக மாற்றியமைத்துள்ளோம். அந்த சிறப்பு சந்தைக்கு தான் இந்த மதுபான உரிமை பத்திரம் கிடைக்கின்றது.

அதேவேளை எந்தவொரு மதுபான உரிமைப் பத்திரம் வழங்கும்போதும் பிரதேச செயலகத்திற்கு அதிகாரம் இருக்கின்றது. அதாவது, இது தொடர்பில் கிராம அலுவலர்களுக்கு அனுப்பி பிரதேசத்தின் எதிர்ப்புகள் தொடர்பில் விசேட அறிக்கையை கோருவதற்கு அதிகாரம் காணப்படுகின்றது.

இவ்வாறு எதிர்ப்புகள் வருமாக இருந்தால் அவர்களுக்கு மதுபான உரிமை பத்திரங்களை நாம் வழங்குவதில்லை - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் வெப்பநிலை மேலும் உயர்ந்தால் நாட்டின் பவளப்பாறைகள் அழிவடையும்!

கொழும்பு, மே 10

**தற்போது அதிகரித்துள்ள கடல் வெப்பநிலை மேலும் ஒரு மாத காலம் நீடித்தால் இலங்கையை சுற்றியுள்ள கடலில் உள்ள பவளப்பாறைகள் அழியும் அபாயம் ஏற்படும் என்று சமுத்திவிரவியல் விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.**

மன்னார் வளைகுடா மற்றும் இலட்சத்தீவு கடல் பகுதிகளில் பவளப் பாறைகள் அழிவடையும் அபாயகரமான சூழல் பதிவாகியுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக தேசிய நீர்வள ஆராய்ச்சி மேம்பாட்டு முகாமைத்துவத்தின் (நாரா) பணிப்பாளரும் சமுத்திவிரவியல் விஞ்ஞானியுமான கலாநிதி கே. அருளானந்தன் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில்,

கடலில் வெப்பநிலை 31 பாகை செல்சியஸாக அதிகரித்து இரண்டு வாரங்கள் நீடித்துள்ளது. நாட்டிலுள்ள பவளப் பாறைகளின் நிலை குறித்து நாரா எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை. ஆனால், பவளப்பாறைகள் நிறத்தை இழந்து அழிவடையும் என்பதை நிராகரிக்க முடியாது.

பவளப்பாறைகள் உருவாக கடலின் வெப்பநிலை 27-28 பாகை செல்சியஸ் வரை ஏற்ற இறக்கமாக இருக்க வேண்டும். தற்போதைய அதிகரித்த வெப்பநிலை இன்னும் ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் நீடித்தால் பவளப்பாறைகள் அழிவடையும்.

கடல்நீரின் வெப்பம் வழக்கத்தை விட அதிகரிக்கும்போது பவளப்பாறைகள் தமது நிறத்தை இழந்து வெளுக்கத் தொடங்குகின்றன. இதன் மூலம் பவளப்பாறைகளின் அழிவைத் தெரிந்து கொள்ள முடியும். பவளப்பாறைகள் அழிந்தால் அதைச் சார்ந்து வாழும் மீன்கள்உள்ளிட்ட ஏராளமான கடல் உயிரினங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நளினி இலங்கை வந்தார்!



கிளிநொச்சி, மே 10

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான நளினி கிளிநொச்சி வந்துள்ளார்.

அவரின் கணவரான முருகன் தற்போது கிளிநொச்சி - பளையில் வசித்து வருகிறார். இந்த நிலையில் அவர் தனது கணவரை பார்ப்பதற்காக இலங்கை வந்துள்ளார்.

தற்போது, அவர் தனது கணவரான முருகனுடன் பளையில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூலிப் படைக்கு ஆள் கடத்திய முன்னாள் மேஜர் ஜெனரல் கைது!

கொழும்பு, மே 10

ரஷ்யா, உக்ரைனுக்கு கூலிப் படைகளாக இலங்கையர்களை அனுப்பினர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரும் முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் இவர்கள் குருநாகல் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட னர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

சந்தேகநபர்களிடம் குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# உறங்கிக் கொண்டிருந்தவர் வாளால் வெட்டிக் கொலை!

கொழும்பு, மே 10

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டில் ஒருவர் உயிரிழந்தார். பிரபல போதைப் பொருள் கடத்தல் மற்றும் வியாபாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

காலி - குருந்தகந்தை - அக்மீமன பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இரவு நடந்ததாகக் கூறப்படும் இந்த சம்பவத்தில் "ஹிச்மில்லி" என்றழைக்கப்படும் 43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

அத்துடன், இந்த சம்பவத்தில் அவரின் மூத்த சகோதரனும் காயமடைந்து காலி கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

போதைப் பொருள் வியாபாரம் தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இந்த வாள்வெட்டு சம்பவத்துக்கு காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ரூ. 1.4 கோடி பெறுமதியான நகைகளுடன் பெண் கைது!

கொழும்பு, மே 10

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளுடன் இந்திய பெண் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

36 வயதுடைய இந்தியப் பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். டுபாயிலிருந்து நேற்று கட்டு நாயக்காவுக்கு வருகை தந்த போதே அவர் கைது செய்யப் பட்டார்.

தனது பயணப் பொதியில் அவர் சூட்சுமமாக தங்க நகைகளை மறைத்து வைத்து கடத்தியபோதே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 75 கிராம் நிறையுடைய ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

கைதான பெண், ஆடைகள், கைபேசிகள் மற்றும் கைபேசி பாகங்களை விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டு வருபவர் என்று கூறப்பட்டது. (ஐ)

# சிறைக் கைதி தப்பியோட்டம்

கொழும்பு, மே 10


களுத்துறை - நாகொடை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறைக் கைதியொருவர் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

வாதுவை - தெல்துவ பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் கடந்த ஏப்ரல் மாதம் 2.3 கிராம் ஹெரோயின் வைத்திருந்து குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விளக்கமறியலில் இருந்த இவர் மற்றோரு கைதியுடன் மோதியதால் ஏற்பட்ட காயத்தைத் தொடர்ந்து கடந்த 6ஆம் திகதி நாகொடை போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்று முன்தினம் கழிவறைக்கு செல்வதாகக் கூறி யன்னல் வழியாக தப்பிச் சென்றுள்ளார். (ஐ)



# காட்டு யானைகளால் பயிர் செய்கை அழிப்பு

முல்லைத்தீவு, மே 10

விசுவமடு - மேட்டுப்பட்டித்தெரு கிராமத்தில் விவசாயி ஒருவரின் நிலத்திலுள்ள பயிர்களை யானைகள் அழித்துள்ளன.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விவசாயி ஒருவரின் தோட்டத்துக்குள் நுழைந்த யானைகள் அறுவடைக்கு தயாராக இருந்த தர்பூசணி பழங்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட வாழை மரங்களை அழித்தன.

மேலும், நீண்டகாலமாக அப்பகுதியில் யானைகள் தமது வாழ்வாதாரங்களை அழித்து வருவதாகவும் யானை வேலிகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகாத நிலையில் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், சம்பந்தபட்ட அதிகாரிகள் விரைந்து தமது பிரச்னைக்கு தீர்வு பெற்று தருமாறும் விவசாயிகள் கோரினர். (ஐ)

# கங்கையில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

கண்டி, மே 10

மகாவலி கங்கையில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

கண்டி - கட்டுகஸ்தோட்டை - வராதென்ன பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்டியை சேர்ந்த 66 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

அவர் தனது நண்பருடன் கங்கையில் நீராடியபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார். (ஐ)

# 4 கோடி ரூபாய் பெறுமதியான தங்கஜெல்லுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 10

4 கோடி ரூபாய் பெறுமதியான தங்க ஜெல் கரைசலுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வர்த்தகர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கல்முனையை சேர்ந்த 25 வயதுடைய வர்த்தகரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் டுபாயிலிருந்து நேற்று காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். அவரிடம் சுங்கப் பிரிவினர் நடத்திய சோதனையில் ஒரு கிலோ 975 கிராம் தங்க ஜெல் கரைசல்கள் கொண்ட 3 பொதிகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்கா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

# டிரானின் அமைச்சு செயலர் கோப் குழுவுக்கு அழைப்பு!

கொழும்பு, மே 10

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஆகியோர் நேற்று வியாழக்கிழமை அரசாங்க நிதி பற்றிய குழுவான கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டனர்.

அந்த குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தமது எக்ஸ் தளத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள வீசா பிரச்னை தொடர்பில் ஆராய்வதற்காகவே குறித்த இருவரும் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# அனுமதியின்றி மஸ்கெலியாவில் மாணிக்க கல் அகழ்ந்தோர் கைது!

நுவரெலியா, மே 10

நுவரெலியா - மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வு பணி ணயில் ஈடுபட்ட இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பிரதேசத்தை சேர்ந்த 20 மற்றும் 22 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து மாணிக்கக் கல் அகழ்வு பணிக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வடக்கு போராட்டம் 45 நாட்களை நிறைவு செய்தது

கல்முனை, மே 10

**கல்முனை வடக்கு பிரதேச செயலகம்மீது தொடர்ச்சியான நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக பொது மக்கள் நடத்திவரும் போராட்டம் நேற்றுடன் 45 நாட்களை நிறைவு செய்தது.**




பிரதேச செயலகம் முன்பாக கடந்த மார்ச் 25ஆம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உதவி மாவட்ட செயலர் பிரிவாக செயல்பட்டு வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகம், 1988ஆம் ஆண்டு பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. 1993ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

இந்த நிலையில், கடந்த சில வருடங்களாக இந்தப் பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை குறைக்க அரசியல்வாதிகள் சிலர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் உடனடித் தீர்வு காணுமாறு மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பெண் தலைமை குடும்பங்களுக்கு தூவல் நீர்ப்பாசன கருவி அன்பளிப்பு

திருகோணமலை, மே 09

11 பெண் தலைமை குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துவதற்காக நீர் இறைக்கும் இயந்திர குழாய்கள் மற்றும் தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட பெண் தலைமை குடும்பங்களுக்கே இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் வழங்கி வைத்தார். (ஐ)

# குடிமனைகளுக்குள் புகும் முதலைகளால் மக்கள் அச்சம்!

அம்பாறை, மே 10

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில் அதிகளவிலான முதலைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைகின்றன என்று கூறப்பட்டது.

மாவடிப்பள்ளி பாலம் சம்மாந்துறை, ஒலுவில், நிந்தவூர், மருதமுனை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கிட்டங்கி, நாவிதன்வெளி, உள்ளிட்ட பகுதிகளிலேயே ஆற்றிலிருந்து வெளியேறி முதலைகள் குடியிருப்பு பகுதிகளில் நுழைகின்றன.

இதனால், இரவு வேளைகளில் அந்தப் பகுதிகளில் மக்கள் செல்வதற்கு அச்சம் நிலவுகின்றது.

தற்போது, சிறுபோகம் ஆரம்பித்துள்ள நிலையில் கால்வாய்களில் புகுந்துள்ள முதலைகள் ஆடு, மாடுகளை வேட்டையாடி வருகின்றன. இதனால், மக்களுக்கு பெரும் பொருளாதார இழப்புகளும் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, இது விடயத்தில் வனத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# மட்டு. போதனாவுக்கு ஒதுக்கப்பட்ட சத்திர சிகிச்சை கருவி வேறிடத்துக்கு

## ஹரீஸ் எம். பி. கண்டனம்

கொழும்பு, மே 10

கிழக்கு மாகாண மக்களின் நன்மை கருதி மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்ட இதய நோய் சத்திர சிகிச்சை இயந்திரம் வேறு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு கண்டனத்துக்கு உரியது என்று ஹரீஸ் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் ஆற்றிய உரையிலேயே மேற்கண்ட கண்டனத்தை வெளியிட்ட அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு,

கிழக்கு மாகாணத்தில் இதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இவ்வாறான சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாணத்தில் அதிக நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கி வரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கடந்த காலங்களில் இதய சத்திர சிகிச்சை செய்வதற்கான கருவி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அன்றிருந்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதனை வேறு ஒரு மாவட்டத்துக்கு இடமாற்றியதால் கிழக்கு மாகாணத்தில் இருதய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனினும், மட்டக்களப்பில் உள்ள சத்திய சாயிபாபா மருத்துவமனை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு - இதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக சிகிச்சை வழங்கி வருவது பாராட்டத்தக்கது - என்றார். (ஐ)

# கிராம உத்தியோகத்தர் நியமனம் கிண்ணியாவுக்கு அநீதி இழைப்பு

## மீள்பரிசீலனை செய்ய இராஜாங்க அமைச்சரிடம் மஹ்ரூப் கோரிக்கை

கொழும்பு, மே 10

கிராம உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டதில் கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று இம்ரான் மஹரூப் எம். பி. கூறியுள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியங்கவை சந்தித்து இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அமைச்சரை சந்தித்த அவர், கிராம உத்தியோகத்தர் நேர்முகத் தேர்வுக்கு கிண்ணியா பிரதேச செயலர் பிரிவிலிருந்து 11 பேர் தோற்றினர். இதில், இருவரே தெரிவாகினர். இவர்களில் 5 அல்லது 6 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஏனைய பிரதேச நியமனங்களோடு ஒப்பிடுகையில் கிண்ணியா பிரதேசத்துக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே, இது குறித்து மீள் பரீசீலனை செய்ய வேண்டும் என்று மஹரூப் எம். பி. கோரியுள்ளார்.

இந்த விடயத்தில் கவனம் எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார் என்று மஹரூப் எம். பியிடம் உறுதியளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# ரென்னிஸ் ஆடுகளம் திறந்து வைக்கப்பட்டது

அம்பாறை, மே 10

பொலிஸ் திணைக்களத்தின் உதவியுடன் ரென்னிஸ் சங்கத்தால் அம்பாறை பொது மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்ட ரென்னிஸ் ஆடுகளத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்துவைத்தார்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் தமெந்த விஜயசிறி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாணவர்கள் ரென்னிஸ் விளையாட்டில் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மூதூர் - பெரியபாலத்தில் கிராமிய சுகாதார நிலையம் திறக்கப்பட்டது

திருகோணமலை, மே 10

மூதூர் பெரிய பாலம் கிராமிய சுகாதார நிலையம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இதன்மூலம் திருகோணமலை - மூதூர் பெரிய பால கிராம மக்களின் நீண்டகால சுகாதார தேவையாக இருந்த பிரச்னை தீர்த்து வைக்கப்பட்டது.

மூதூர் சகாதார மருத்துவ அதிகாரி எம். பி. எம். ஹில்மி தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணாமலை



மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நுவான் கபில அதுக்கோரள, சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மகிபால, திருகோணமலை மாவட்ட மருத்துவ அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ரபாமீது போர் தொடுத்தால் ஆயுத உதவி நிறுத்தப்படும்

## இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்த அமெரிக்கா

வாஷிங்டன், மே 10

**தெற்கு காஸாவிலுள்ள ரபா நகரைக் கைப்பற்றும் முனைப்பில் இஸ்ரேல் போர் தொடுத்தால் இனிமேல் அந்த நாட்டுக்கு ஆயுத உதவிகள் வழங்கப்பட மாட்டாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**



இஸ்ரேலுடனான தற்காலிக போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் அமைப்பினர் அண்மையில் ஒப்புதல் தெரிவித்தனர். எகிப்து மற்றும் கட்டார் நாடுகளின் சமரச பேச்சுக்களைத் தொடர்ந்து ஹமாஸ் போர் நிறுத்தத்துக்கு இணங்கியது.


ஆனாலும், இஸ்ரேல் தொடர்ந்து எகிப்து எல்லையை ஒட்டிய தெற்கு காஸாவின் ரபா நகர் மீது தரைவழித் தாக்குதலை நடத்தி வருகிறது. வடக்கு காஸா, மத்திய காஸாவில் ஹமாஸ் குழுக்களை கட்டுப்படுத்திவிட்டோம். தெற்கில் ஹமாஸ் குழுவினர் மக்களோடு மக்களாகப் பதுங்கியுள்ளனர். அவர்களை அழிக்காவிட்டால் போர் முழுமை பெறாது- என்று இஸ்ரேல் தாக்குதலைத் தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில், ரபா நகருக்குள் முன்னேறினால் இனிமேல் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கப் போவதில்லை என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். காஸாவில் தாக்குதல் நடத்தும் இஸ்ரேலுக்கு உதவுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் தொடங்கிய மாணவர்கள் போராட்டம் காட்டுத் தீ போல் பல பிரபல பல்கலைக்கழகங்களுக்கும் பரவிட்டது.

மாணவர்களின் போராட்டத்தை ஒடுக்க கைது நடவடிக்கையில்அமெரிக்க பொலிஸார் களமிறங்கியுள்ளனர். மாணவர்கள் மீது அடக்குமுறை ஏவப்படுவதாக விமர்சனங்களும் வலுத்துள்ளன.

(எ)



# வரலாறு காணாத தொடர் மழை வெள்ளத்தில் மூழ்கியது பிரேசில்

## 100 பேர் உயிரிழப்பு

ஸா பாலோ, மே 10

பிரேசிலில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பெய்துவரும் தொடர் கனமழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி இதுவரை 100 பேர் உயிரிழந்தனர். மேலும் 2 இலட்சம் பேர் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

தெற்கு பிரேசிலின் ரியோ கிராண்டே டோ சுல் மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கனமழை பெய்து வருகிறது. ஐந்து மாதங்கள் பெய்ய வேண்டிய மழை ஒரே வாரத்தில் கொட்டித் தீர்த்துள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் அங்கு வரலாறு காணாத பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மாகாணத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100-ஐ தாண்டியுள்ளது. மேலும் காணாமல் போனவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பல்வேறு இடங்களில் குடிநீர் வசதி, மின்சாரம், இணையம், தொலைத் தொடர்பு உள்ளிட்டவை துண்டிக்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு இலட்சம் வீடுகள் வெள்ளத்தால் சேதமடைந்தன.

கடந்த ஒரு வாரத்தில் பெய்த மழை மற்றும் வெள்ளத்தால் 904 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து இழப்பு ஏற்பட்டிருப்பதாக பிரேசில் அரசு தெரிவித்துள்ளது. (எ)



# வெடிபொருட்கள் இறக்குமதியை நிறுத்துவதற்கு இந்தியா முடிவு

டில்லி, மே 10

இந்தியா அதன் இராணுவத் தளபாடங்களுக்கு வெளிநாடுகளைப் பெரிதும் சார்ந்து இருக்கிறது. இராணுவத் தளபாட இறக்குமதியில் இந்தியா முதல் இடத்திலுள்ளது. உலகளாவிய ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கு 9. 8 சதவீதமாகும். இந்நிலையில், பாதுகாப்புத் துறையில் சுயசார்பை எட்ட இலக்கு நிர்ணயித்து இந்தியா பயணித்து வருகிறது.

இது குறித்து இராணுவ மேஜர் ஜெனரல் வி. கே. சர்மா கூறுகையில், “இந்திய இராணுவம் தற்போது ஆண்டுக்கு 6,000 கோடி ரூபாய் முதல் 8,000 கோடி ரூபாய் வரையில் வெடிகுண்டுகளை கொள்முதல் செய்து வருகிறது. ஏற்கனவே வெளிநாடுகளிலிருந்து வெடிபொருட்களைக் கொள்முதல் செய்வது படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது 10 சதவீத அளவிலேயே குண்டுகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. 2025 - 26 நிதி ஆண்டு முதல் அந்த இறக்குமதியும் நிறுத்தப்படும்.


இனி இந்திய இராணுவம் தனக்குத் தேவையான வெடிபொருட்களை உள்நாட்டிலேயே கொள்முதல் செய்யும். தயாரிப்பு செலவு மிகுந்த குண்டுகள் மட்டுமே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும். தற்போது இந்தியாவில் தனியார் நிறுவனங்கள் வெடிபொருட்கள் தயாரிப்பில் இறங்கியுள்ளன. இதனால், இந்தியா விரைவிலேயே வெடிபொருட்கள் தயாரிப்பில் சர்வதேச சந்தையாக மாறும்”- என்றார் வி. கே. சர்மா. (எ)

நட்பு நாடுகளுடன் இணைந்து

# தென் சீன கடலில் இந்திய போர் கப்பல்கள் பயிற்சி

டில்லி, மே 10

சிங்கப்பூர், வியட்நாம், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய ஆசிய நாடுகளின் கடற்படையுடன் தென் சீன கடல் பகுதியில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்காக 3 இந்திய போர்க் கப்பல்கள் சிங்கப்பூர் சென்றுள்ளன.



தென் சீன கடல் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இங்கு அண்டை நாடுகளுடன் சீனாவுக்கு எல்லைப் பிரச்னை நிலவுகிறது. அது மட்டுமல்லாமல் இந்தியப் பெருங் கடல் பகுதியிலும் தனது 4 ஆய்வுக் கப்பல்களை சீனா அனுப்பியுள்ளது. இந்தக் கப்பல்கள் சீனப் போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்களின் போக்குவரத்துக்கான தரவுகளை சேகரிப்பதோடு, இந்தியாவின் ஏவுகணைச் சோதனைகளையும் கண்காணித்து வருகின்றன.

இந்நிலையில் இந்தியக் கடற்படையின் ஐ. என். எஸ். டில்லி, டேங்கர் கப்பல் ஐ. என். எஸ். சக்தி, நீர்மூழ்கி கப்பல்களைத் தாக்கி அழிக்கும் திறன்வாய்ந்த ஐ. என். எஸ். கில்டன் ஆகிய 3 போர்க்கப்பல்கள் தென் மண்டல கொமாண்டர் ரியர் அட்மிரல் ராஜேஷ் தன்கர் தலைமையில் தென் சீன கடல் பகுதிக்கு சென்றுள்ளன. தற்போது இந்த 3 கப்பல்களும் சிங்கப்பூர் சென்றடைந்தன.


இவை சிங்கப்பூர் கடற்படையுடன் இணைந்து தென் சீன கடல் பகுதியில் கூட்டுப்பயிற்சி மேற்கொள்கின்றன. இரு நாட்டு கடற்படை இடையே கடந்த 30 ஆண்டுகளாக நல்ல ஒத்துழைப்பு நிலவுகிறது. அத்தோடு, இரு நாட்டு போர்க்கப்பல்களும், பரஸ்பர பயணம், கூட்டுப் பயிற்சி போன்றவற்றில் தொடர்ந்து ஈடுபடுகின்றன. மேலும், வியட்நாம், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய ஆசியான் நாடுகளுடனும் இந்திய போர்க் கப்பல்கள் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளன.

(எ)

# இராமர் கோவில் தீர்ப்பை காங்கிரஸ் எதிர்க்காது

டில்லி, மே 10

இராமர் கோவில் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய் யும் திட்டமில்லை என காங்கிரஸ் திட்டவட்டமாகத் தெரி வித்துள்ளது. மத்திய பிரதேசத்தில் நடந்த பேரணியில் பிரதமர் மோடி பேசுகையில், அயோத்தி இராமர் கோவில் தீர்ப்பை இரத்துச் செய்ய ராகுல் காந்தி முயல்கிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார்.



இதற்குப் பதிளிக்கும் வகையில் காங்கிரஸ் தெரிவித்தவை வருமாறு, இராமர் கோவில் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் காங்கிரஸ் உறுதியாகவுள்ளது. மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அதை இரத்து செய்யும் திட்டம் எதுவும் இல்லை.

தீர்ப்பை எதிர்த்து மேல்மு றையீடு செய்யப் [illegible] இந்த விஷயத்தில் நீதிமன்றத்தின் தலையீடு குறித்து முதலில் கேள்வி எழுப்பியது பா. ஜ. க. தான். இவ்வாறு காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், “பிரதமர் மோடி பொய் என்ற தொற்று நோயைப் பரப்பி விடுகிறார். அவரது முழு அரசியல் வாழ்க்கையும் அசத்திய மேவ ஜெயதேயில் தொகுக்கப் பட்டுள்ளது”- என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2 ஆயிரம் குழந்தைகள் தலசீமியாவால் பாதிப்பு

கொழும்பு, மே 10

**நாட்டில் ஏறக்குறைய 2 ஆயிரம் குழந்தைகள் தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தலசீமியா நோய் மருத்துவ நிபுணர் ஈ. எம் ரஞ்சனி எத்ரிசூரிய தெரிவித்துள்ளார்.**

சர்வதேச தலசீமியா தினத்தை முன்னிட்டு கொழும்பு சுகாதார மேம்பாட்டு பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தலசீமியா ஹீமோகுளோபின் உற்பத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தும் மரபணு மாற்றத்தால் ஏற்படும் நோய் என்பதால், குழந்தைகளுக்கு அதிக அளவு இரத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

தலசீமியா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான செலவு சுகாதார அமைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும், நோயால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள்மீது மிகப்பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இந்நிலைமையை தடுப்பதற்கு நாட்டில் தலசீமியா பிரசவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது முக்கியம். இதன்படி, தலசீமியா கேரியர் நிலையை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் தலசீமியா தாக்கம் கொண்ட குழந்தைகள் பிறப்பதைத் தடுக்க முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், திருமணத்துக்கு முன்னர் அனைவருக்கும் தலசீமியா பாதிப்பு உள்ளதா என்பதை பரிசோதிப்பது அவசியம் - என்றும் சொன்னார். (ஐ)

## பெண் ஒருவருக்கு சொந்தமான ரூ.12 கோடி சொத்துகள் முடக்கம்

கொழும்பு, மே 10

காலி பிரதேசத்தில் பெண் ஒருவருக்கு சொந்தமான சுமார் 12 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகளை தடை செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த சொத்துக்கள் எவ்வாறு ஈட்டப்பட்டமை என்ற தகவல்கள் வெளியிடப்படாதமையால் காலி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவரின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

இதில், காலி தடல்ல பிரதேசத்தில் நான்கு மாடி கட்டிடமும் அக்மீமன பிரதேசத்தில் ஒன்றரை ஏக்கர் தேயிலை மற்றும் மிளகு காணியும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சொத்துகள் தொடர்பில் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, மே 10

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

காலி - எல்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் 27 வயது இளைஞரே உயிரிழந்தார்.

அவித்தாவையிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சு. கவின் தலைவராக மைத்திரி தொடர்வதற்கு தொடர்ந்தும் தடை!

கொழும்பு, மே 10

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயல்படுவதற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 29ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்று வியாழக்கிழமை கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகள் இருந்தால் பதில் மனுதாரர்கள் தாக்கல் செய்ய உத்தரவிட்ட மாவட்ட நீதிபதி வழக்கை வரும் 29ஆம் திகதி மீண்டும் அழைக்க உத்தரவிட்டார்.



சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, உப தலைவர் பைசர் முஸ்தபா உள்ளிட்டோர் இந்த் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேலும் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவை நியமித்தமை கட்சியின் யாப்புக்கு முரணானது. அவர் அந்தப் பதவியை வகிப்பதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த மனுவை தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை பிரஜை அல்லாதவர் தேர்தலில் போட்டியிடவே தடை

**மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு**

கொழும்பு, மே 10

இலங்கை பிரஜைகள் அல்லாதவர்கள் அரசியல் கட்சியொன்றை பதிவு செய்வதற்கு சட்டரீதியான தடை எதுவும் இல்லை. அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதை மட்டுமே சட்டம் தடுக்கிறது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய நேற்று தெரிவித்துள்ளார்.

அவர் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில்,

"பிரஜை அல்லாத ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதை மட்டும் இலங்கைச் சட்டம் தடுக்கிறது, அதே நேரத்தில்



குடிமகன் அல்லாதவர்கள் தேர்தலில் வாக்களிப்பதையும் சட்டம் தடை செய்கிறது"

மேலும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனுவில் கையெழுத்திடவில்லை. அவர் ஒருபோதும் "எமது தேசிய முன்னணி" யின் பொதுச் செயலாளராக இருந்ததில்லை என்றும் அவர் கூறினார்.

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான அரசியல் கூட்டணியை முறித்துக் கொண்ட காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர மற்றும் மறைந்த சிறீபதி சூரியாராச்சி ஆகியோரால் "எமது தேசிய முன்னணி" உருவாக்கப்பட்டது.

அந்தப் பேரவை ஜாதிக பெரமுனவின் பொது செயலாளராக ருவான் பெர்னாண்டாஸ் இருந்த நிலையில், டயானா கமகேவின் கணவர் அந்தப் பதவியை பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது - என்றும் கூறினார். (ஐ)

## பெரமுன தனது வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துகிறது!

கொழும்பு, மே 10

பொதுஜன பெரமுனவின் வேலைத்திட்டங்களை தற்போது வெற்றிகரமான முன்னெடுத்து செல்கிறோம். எனவே, பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளிக்குமாறும் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றின் போது செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தற்போது மக்கள் மத்தியில் முன்னிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் வினவியபோது,

அதனைப் பார்த்து சிரிக்கத் தான் முடியும் - என்றார்.

இதேவேளை, தற்போது பொதுஜன பெரமுனவை விட சஜித் பிரேமதாஸதலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி என்பன குறைந்த மட்டத்தில் இருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

அத்துடன், பொதுஜன பெரமுனவின் வேலைத்திட்டங்களை



மிகவும் வெற்றிகரமான முறையில் முன்னெடுத்து செல்வதாகவும், இதன் மூலம் மக்கள் நம்பிக்கையுடன் இருக்க முடியும் - என்றார். (ஐ)

## வெளிநாட்டு சிகரெட்களுடன் ஒருவர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, மே 10

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் இந்த சிகரெட்டுகளை டுபாயிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கொண்டு வந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஐ)

## 2 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 10

சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் ரக போதைப் பொருளுடன் தாய்லாந்தில் இருந்து வந்த இளைஞர் கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

கொழும்பு - ஹோமாகமவை சேர்ந்த 32 வயதான தொழில்முறை நடனக் கலைஞரான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சூட்சுமமான முறையில் மறைத்து வைத்த 5 கிலோ 256 கிராம் குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

தனித்தனியாக 36 பொதிகளாக பொதியிட்ட நிலையில் இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போர் நிறைவுற்று 15 ஆண்டுகள் படையினரின் அத்துமீறல்கள் தொடர்கின்றன!

## சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 10

சிறிலங்காவில் உள்நாட்டுப் போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் தமிழ் இளைஞர் யுவதிகளை கடத்திச் சென்று காணாமல் ஆக்குவதும், அவர்களை பாரதூரமான உடல் மற்றும் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்குவதும் தொடர்ந்தும் இடம்பெறுவதாக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்டத்தின் புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“தமிழர்களின் காணாமல் போதல்கள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள், 2015-2022“ என்னும் இவ்வறிக்கையில், இந்த ஏழாண்டு காலப்பகுதியில், 139 தடவைகள் சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளால் சட்டவிரோதமாகப் பிடித்துச்செல்லப்பட்டு, தடுத்துவைத்திருக்கப்பட்ட, 20-39 வயதிற்குட்பட்டவர்களைப் பெரும்பான்மையானவர்களாகக் கொண்ட, 109 ஆண்களும் 14 பெண்களுமாக, 123 தமிழர்களது வாக்கு மூலங்கள் ஆராயப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட இத்தமிழர்கள் அனைவரும் இப்போது இலங்கைக்கு வெளியே வசிக்கின்றார்கள்.

2009இல் போர் முடிந்த பின்னர், தமிழர்கள் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பில் முன்னர் வெளியிட்ட அறிக்கைகளின் தொடர்ச்சி யாக வெளிவரும் இப்புதிய அறிக்கை, சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர் களுக்கும் தமிழ்ப் பொதுமக்களுக்கும் எதிரான கடத்தல், காணாமல் போகச்செய்தல் மற்றும் சித்திரவதைகளில் பாதுகாப்புப் படைகளால் போர் முடிவடைந்த உடனடி ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அதே முறைமைகளும் நடைமுறைகளுமே இற்றைவரையும் தொடர்வதைக் காட்டுகின்றது.

“மேற்கொள்ளும் குற்றங்களுக்கு எவ்விதமான பின்விளைவுகளையும் எதிர்கொள்ளாமல் அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்றுதான் தண்டனையிலிருந்து விலக்களித்தல் என்பது வரையறை செய்யப்படுகின்றது.

இது காலப்போக்கில் அரசியல் அமைப்புக்களிலுள்ளும் அரசியல் கலாச்சாரத்தினுள்ளும் ஆழ வேரூன்றிப் போயுள்ளது.

சிறிலங்காவில், பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரதூரமான சர்வதேசக் குற்றங்களுக்கு எவ்விதமான பொறுப்புக் கூறலுமில்லாமல் பல தசாப்தங்களாக இத்தண்டனை விலக்களிப்பு நிலைநாட்டப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் பாதுகாப்புதுறை சீரமைக்கப்படுவதற்கும், தமிழர்களுக்கு எதிராக இவ்வன்முறைக் கலாச்சாரத்திற்குப் பொறுப்பானவர்களை நீக்குவதற்கும் சர்வதேச சமூகம் பாரிய அழுத்தத்தைக் கொடுத்தால் மட்டுமே இதனை நிறுத்திக்கொள்ள முடியும்.

இவ்வறிக்கையில் ஆய்வுசெய்யப்பட்ட வாக்குமூலங்களை வழங்கியவர்கள் பிரித்தானியாவிலோ அல்லது இதர இடங்களிலோ புகலிடம் கோரும் தமிழர்களின் ஒரு சிறு பகுதியினர் மட்டுமே“ இவ்வாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

இவ்வறிக்கையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 2022இல் இடம்பெற்ற தடுத்து வைப்புக்களில், அவரைவாசி- 24பேரில் 11 பேர் - சம்பவங்கள் யூலை 2022இல் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரேயே நிகழ்ந்தன.

இந்த 139 சம்பவங்களில், 65 சம்பவங்களில், பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது சொந்த வீடுகளிலிருந்து அல்லது உறவினர்களின் வீடுகளிலிருந்து, உறவினர்கள் முன்னிலையில் சிறிலங்காவின் சட்ட அமுலாக்கள் அதிகாரிகளால் பிடித்துச் செல்லப்பட்டார்கள். இதர சம்பவங்களில் பெரும்பாலானவற் றில், அவர்கள் வீட்டுக்கு அல்லது வேலைக்குச் சென்றுகொண்டிருக்கையில் பிடித்துச் செல்லப்பட்டார்கள்.

இவ்வனைத்துச் சம்பவங்களிலும், தடுத்து வைக்கப்பட்டவர்களது கண்கள் கட்டப்பட்டும், கைகள் பின்னால் கட்டப்பட்டும், பெரும்பாலும் வெள்ளைநிற வான்களிலேயே பிடித்துச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். ஒரு சில சம்பவங்களைத் தவிர, மற்றைய அனைத்திலும் அவர்கள் அடையாளம் தெரியாத இடங்களுக்கே கொண்டு செல்லப்பட்டதுடன், குடும்பங்களுக்கும் அவர்கள் எங்கே கொண்டுசெல்லப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படவில்லை.

இரகசியத் தடுப்பு மையங்களில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருக்கையில், 139 தடுப்புக்காவல் சம்பவங்களில் 130 இல், விசாரணைகளின்போது, குறைந்தபட்சம் கடுமையாகத் தாக்கப்பட்டது உட்பட சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர்.

85 சம்பவங்களில், பிளாஸ்ரிக் பைகளால் மூச்சுத்திணறல் செய்யப்பட்டது. 47 சம்பவங்களில் சிகரட் அல்லது சூடான பொருட்களால் அவர்களுக்கு சூடுவைக்கப்பட்டது. 46 பேர் நீரில் முகத்தை அழுத்தி மூச்சுத் திணறலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

32 சம்வங்களில் அவர்கள் கயிற்றில் கட்டித் தொங்கவிடப்பட்டனர். 85 சம்பவங்களில் அவர்கள் பலமுறையான வடிவங்களில் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.“ எனக் கூறப்பட்டிருந்தது.

(அ)

### வருமானம்...

செலுத்த வேண்டும். மேலும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பசுமைப் பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட புதிய தொழில்நுட்ப அம்சங்களை பொருளாதார செயற்பாடுகளில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறின்றி, ஒரு பொருளாதாரத்தை நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்த முடியாது. பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பலன்களை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் முறையாகப் பகிர்ந்தளிப்பதை மையமாகக் கொண்ட சமூக-சந்தை பொருளாதார அடித் தளத்தை நாம் நிறுவ வேண்டும்.

நமது பொருளாதார வலிமையை அதிகரிக்க, விரைவான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் நாம் பயணிக்க வேண்டும். உயர் பொருளாதார வளர்ச்சியால், நமது கடன் சுமை குறையும். அதுமட்டுமின்றி வாழ்க்கைச் செலவும் குறையும்.

தொடர்ந்தும் மக்கள் மீது சுமையேற்றும், நட்டத்தில் இயங்கும் அரச தொழில்முயற்சிகளை எமது பொருளாதாரத்தால் முன்னெடுக்க முடியவில்லை. இதற்கான மாற்றுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

தனியார் துறையின் பங்களிப்பின் மூலம் அரச நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்த முடியுமென்றால், மக்கள் மீது வரிச் சுமையை ஏற்றி, நட்டத்தை ஏற்படுத்தும் அரச தொழில்முயற்சிகளை அப்படியே தொடரக்கூடாது.

நாட்டில் பெருமளவிலான காணிகள் முறையாகப் பயன்படுத்தப்படாமல் மக்களுக்குச் சுமையேற்றும் வகையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த காலங்களில், அந்த காணிகளில் தனியார் துறையால் வெற்றிகரமான விவசாய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்களின் மூலம் அன்றிருந்த அரசாங்கங்கள் அதிக வருமானம் பெற்றன. அந்தச் செயற்பாடுகளின் மூலம் நாட்டுக்கு அதிக அந்நியச் செலாவணியும் கிடைத்தது.

எனவே, வர்த்தக ரீதியில் செயற்படும் ஏற்றுமதியில் கவனம் செலுத்தும் உள்நாட்டு தனியார் துறையின் பங்களிப்புடன் வர்த்தக ஏற்றுமதி விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையை எடுத்துள்ளோம் - என்றார். (அ)

### தமிழர்...

அகதி முகாம்களில் வசிக்கின்றன. இந்த நிலையில், வவுனியா - மன்னார் வீதியை அண்மித் துள்ள கிராம மக்களுக்கு சொந்தமான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இராஜாங்க அமைச்சரின் துணையுடன் ஆக்கிரமிக்கப்பட்டு பள்ளிவாசல் கட்டுவதற்குரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் மக்கள் வாழ்ந்திராத இந்தக் கிராமத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் காணிகள் அடாத்தாக ஆக்கிரமிக்கப்பட்டு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை அயல்கிராமத்தின் பள்ளவாசல் கடிதம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே, எல்லை நிர்ணயம் மூலம் கூழாங்குளம் கிராமம் முற்றுமுழுதான தமிழர் வட்டாரத்தில் உள்வாங்கப்பட்டிருந்த ஒரு கிராமமாகும். எனினும், கடந்த சில வருடங்களில் முறையற்ற வகையில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் பக்கச்சார்புடைய இன ரீதியான நடவடிக்கையால் அங்கு தமிழர்கள் சிறுபான்மையினர் ஆகியுள்ளனர். இங்கு, தமிழரின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அதே சமயம் ஊரின் பொதுக் காணிகளை அங்கு தற்போது வசிக்கும் தமிழ் குடும்பங்கள் பயன்படுத்த முடியாத நிலையும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, இது விடயத்தில் நடுநிலையான விசாரணை நடத்தி தங்களின் நிலமும் வாழ்வும் பாதுகாக்கபடவேண்டும் என்று கூழாங்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்

ஒட்டமாவடி, மே 10

காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணமானார்.

ஓட்டமாவடியை சேர்ந்த முஹம்மது நஸீம் என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பொலநறுவையிலிருந்து ஓட்டமாவடிக்கு காட்டு வழியாக வந்தபோதே யானையால் தாக்கப்பட்டார்.

பொலநறுவை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

(ஐ)

### அதிக...

அவர் உயிரிழந்து காணப்பட்டார்.

இதையடுத்து சடலம் தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக மாற்றப்பட்டது.

பரிசோதனையில் சடலத்தில் 10இற்கும் மேற்பட்ட இடங்களில் அதிக வெப்பத்தால் ஏற்பட்ட எரிகாயங்கள் காணப்பட்டன.

மரணம் குறித்த விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் நேற்று நடத்திய பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதிக வெப்பத்தால் ஏற்பட்ட 5ஆவது மரணம் இதுவாகும். ஏற்கனவே, 4 பேர் வரை அதிக வெப்பத்தால் உயிரிழந்தனர் என்றும் மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று அண்மையில் யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அறிவுறுத்தியிருந்தமை இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

### ஒக்.16இற்குள்...

என்றுள்ளது.

ஏற்கனவே, செப். 17 - ஒக். 16ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணையாளர் கூறியபோதும் உத்தியோகபூர்வ அறிவிப்பை இப்போதே வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

### உயர்நீதிமன்றம்...

நிலையில் அவரது பாராளுமன்ற உறுப்புரிமையும் ரத்து செய்யப்பட்டது. இரட்டை குடியுரிமை உள்ள ஒருவர் பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது - என்றார்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, இரட்டை குடியுரிமை பெற்றுள்ளமை நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் தீர்ப்ப ளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



# ஐ.நா. பிரதிநிதி அநுரவுடன் பேச்சு

கொழும்பு, மே. 10

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆன்ட்ரே பிராஞ்ச்சுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் மக்கள் விடுதலை முன்னணி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகர் பெட்ரிக் மெகார்த்தி, சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான பகுப்பாய்வாளர் நெத்மினி மெதவல அவர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோரும கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் நடப்பு மனித உரிமைகளின் நிலைமை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயன்முறை பற்றி இரு தரப்புக்கும் இடையில் விரிவாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குறிப்பாக இலங்கையில் நல்லிணக்க செயன்முறையை உன்னிப்பாக அவதானிப்பதாக சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் எதிர்வரும் தேர்தல் செயன்முறைக்குள் அரசியல் கட்சிகளால் பின்பற்றபட வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தினர்.

இதன்போது தமது அரசியல் கலாசாரமானது தொடக்கத்தில் இருந்தே ஒழுக்கநெறிக் கோவையை அடிப்படையாகக் கொண்டிருந்ததென்பதை வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட பிரேரணை களுக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் தெரிவித்தது. (அ)

# மீண்டும் எம்.பியானார் முஜிபுர்!

கொழும்பு, மே. 10

டயானா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தகுதி நீக்கம் செய்த உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் வெற்றியீட்டிய முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்காக போட்டியிட தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார்.

எனினும், உள்ளூராட்சி தேர்தலை அரசு பிற்போட்டது. (அ)

# அணையும் விளக்கு சுடர் விட்டு எரியும்!

கொழும்பு, மே. 10

“அணைகின்ற விளக்கு சுடர் விட்டு எரியும் என்பதைப் போன்றே டயனா கமகேவின் விவகாரத்திலும் நிகழ்ந்துள்ளது” என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குறிப்பாக என்னுடனும் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித்துடனும் அண்மையில் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். டயனா கமகே பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடாளுமன்ற சிறப்பரிமைகளை மீறும் வகையிலேயே செயற்பட்டார். இரட்டை குடியுரிமையை மறைத்து அவர் பதவி வகித்தமை தண்டனைக்குரிய குற்றமாகும் - என்றார். (அ)

# எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது!

## கூறுகின்றார் மீன்பிடி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மே 10

“ஜனாதிபதி தேர்தலோ அல்லது பொதுத்தேர்தலோ என எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது” என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் முதலாவதாக ஜனாதிபதித் தேர்தலே நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி தேர்தலோ அல்லது பொதுத்தேர்தலோ என எந்த வொரு தேர்தலையும் எதிர்கொள்ள பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது. தேர்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை கிராம மட்டத்தில் இருந்து நாம் ஆரம்பித்துள்ளோம்.

எதிர்வரும் தேர்தல்களில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும். மக்கள் செல்வாக்கு உள்ள ஒருவரையே நாம் வேட்பாளராக அறிவிப்போம். நாட்டில் எந்த வொரு அரசியல் கட்சியும் எவ்வாறான வாக்குறுதிகளை வழங்கினாலும் பொதுஜன பெரமுன மீது மக் களுக்கு நம்பிக்கை உள்ளது. ஜனா திபதி வேட்பாளர் தொடர்பாக இன்றும் இறுதித் தீர்மானம் எட்டப் படவில்லை. ஜனாதிபதியுடனும் கலந்துரையாடிவருகின்றோம் - என்றார். (அ)

# “கம்பனிகள் வர்த்தமானியை மதித்து 1700 ரூபா சம்பளம் வழங்க வேண்டும்”

கொழும்பு, மே 10

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக 1700 ரூபாயை வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இராஜகிரியவிலுள்ள சங்கத்தின் காரியாலயத்தில் நடந்தது. இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வர்த்தமானியை கம்பனிகள் மதித்து தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். 4வருடங்களாக சம்பள உயர்வை வழங்கமால் இருந்தது அநீதி.

மே மாதம் முதலாம் திகதி தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பளத்தை ஜனாதிபதி அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து வரத்தமானியில் 1700 ரூபாய் சம்பளமும் மேற்படி எடுக்கப்படுகின்ற ஒரு கிலோவுக்கு 80 ரூபாய் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் எனவும் வடிவேல் சுரேஷ் கூறினார் (எ)

# 37 புதிய மதுபானச்சாலைகளுக்கு இந்த வருடத்தில் மட்டும் அனுமதி!

கொழும்பு, மே. 10

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் கலால் திணைக்களத்தினால் மொத்தம் 37 புதிய மதுபான அனு மதிப்பத்திரங்கள் வழங்கப் பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

37ல் 16 சூப்பர் மார்க்கெட்டுக்களுக்கு வழங்கப் பட்டதாக அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீரவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், 2023 ஆம் ஆண்டு 214 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட தாகவும் அதில் 147 சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட் டுள்ளதாகவும், மக்கள் தொகை விகிதத்தின்படி மேலும் 474 மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.



“குடு4 மதுபான அனுமதிகளின் எண்ணிக்கை மக்கள் தொகைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் 1,578 மதுபான அனுமதிகள் இருக்க வேண்டும். எனவே, மேலும் 474 அனுமதிகள் வழங்கப்படலாம்,” என்று அவர் கூறினார்.

ஆளுந்தரப்பில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பி னர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் உள்ளிட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக பொது மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதை தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர, அனுமதி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை வெளியிடுமாறு அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

மதுவரித் திணைக்களத்தினால் மதுபான அனுமதிப் பத்திரம் கோரி 1,008 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு அனுமதிப்பத்திரம் 30 மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார.

“எம்.பி.க்களுக்கு வழங்கப்படும் அனுமதிகள் சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. அரசாங்கத்திற்கு வருமானம் கிடைப்பதை உறுதிசெய்ய அதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டை ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் நாட்டில் மதுபான பாவனை 19 வீதத்தால் குறைந்துள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

# சாதாரண தர பரீட்சையில் ஆங்கில பாட வினாத்தாள் தொடர்பில் புகார்

## குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இன்று முறைப்பாடு

கொழும்பு, மே. 10

சாதாரண தர பொதுதராதர சான்றிதழ் பரீட்சைகள் நடை பெற்று வரும் நிலையில் ஆங்கில பாடத்திற்கான பரீட்சை நேற்று இடம்பெற்றது.

இந்நிலையில், ஆங்கில வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக வெளியிடப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருப்பினும் இதுவரையில் கிடைத்த தகவல்கள் அதனை உறுதிப்படுத்தவில்லை.

எனினும், கொழும்பில் இரு பரீட்சை நிலையங்களில் பரீட்சார்த்திகள் சிலர் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்ட தொலைபேசிகளில் வட்ஸ்அப் செயலி மூலம் விடைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்திருந்ததாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த மாணவர்களுக்கு எதிராக அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஹசலக்க பிரதேசத்திலும் இவ்வாறான சம்பவம் பதிவாகியுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இன்று முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org